NAME : P.KOODAMMAL

ROLL NO. : 15711

YEAR : IIND

BRANCH : COMPUTER ENGINEERING

TOPIC : SCIENCE AND PROGRESS

# அறிவியலும் அதன் முன்னேற்றங்களும்

## முன்னுரை

அறிவியல் என்பது நம் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்டது. நம் அறிவியலையும் அதன் கண்டுபிடிப்புகளையும் பயன்படுத்தி வருகிறோம். அறிவியல் நம் வாழ்க்கையை வளப்படுத்தியிருக்கிறது என்றால் அது மிகையல்ல.

## அறிவியல் என்பது?

*பகலில் மட்டும் சூரியன் தெரிவது ஏன்?*
*இரவில் மட்டுமே நட்சத்திரங்கள் மின்னுவது ஏன்?*
*அறைக்குள் வைத்தாலும் செடிகள் சூரிய ஒளியை நோக்கியே வளர்வது ஏன்?*

இதுபோன்ற ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளும் அவற்றை அறிய நாம் விடைத்தேட மேற்கொள்ளும் அனைத்து வகைச் செயல்பாடுகளுமே அறிவியல்.

காலையில் பல் துலக்கும் வேளையிலிருந்து இரவில் மின்விசிறியின் கீழ்படுத்து உறங்கும்வரை நாள் முழுவதும் பல்வேறு பொருள்களை நாம் பயன்படுத்துகிறோம். அவை அனைத்துமே அறிவியல் தந்த பரிசுகள் தான்.

நுண்ணுயிரிகள், தாவரங்கள், விலங்குகளைப் பற்றி விவரிப்பது உயிரியியல் ஆகும். தாவரவியல், விலங்கியல் என்பது உயிரியலின் இரு பிரிவுகள். கொடி, செடி இவையெல்லாம் தாவரவியல். விலங்குகளை பற்றி கற்பது விலங்கியல். அறிவியல் நமக்கு ஏராளமான நல்ல விஷயங்களை நமக்கு தருகிறது. இன்று அறிவியல் இல்லாமல் இன்று உலகம் இல்லை என்பதே நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

## அறிவியல் அறிவு வளர்ச்சி

இன்று நம் அறிவை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பது செய்தித்தாள்கள், புத்தகங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்றவை. இவையனைத்தும் அறிவியலின் கண்டுபிடிப்புகளே. அறிவியல் வளர்ச்சியின் பயனாக இவை நாளுக்கு நாள் முன்னேற்றம் கண்டு வந்துள்ளன. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஆய்வு போன்றவற்றிற்கும் அறிவியல் துறை பெரிதும் பயன்படுகிறது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை.

## அறிவியல் முன்னேற்றம்

அறிவியல் உலகம் இல்லாமல் இன்று எதுவுமில்லை என்று இன்றைய உலகம் எண்ணிக் கொண்டே வருகிறது. எதை எடுத்தாலும் அறிவியல் கண்டுபிடிப்பு தான் முதலிடம் வகிக்கிறது. இன்று அறிவியல் எவ்வளவோ உயர்ந்துவிட்டது. இன்றைய வருங்காலம் நாளைய அறிவியல் காலம் என்று வந்துவிடும். அறிவியல் இன்று முன்னேறிக்கொண்டே வந்துவிடுகிறது. எவ்வளவோ முன்னேற்றம் இன்று எதை எடுத்தாலும் மருத்துவம், அறிவியல் கண்டுபிடித்த பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது மருத்துவம், போக்குவரத்து, வீட்டுக்கு பயன்படுத்தும் பொருட்கள் என்று எல்லாம் அறிவியல் முன்னேற்றம் தான்.



## அறிவியல் முன்னேற்றத்தில் மருத்துவம்

மருத்துவத் துறையில் அறிவியலின் முன்னேற்றம் எட்டாத உயரத்தைக் கண்டுள்ளது. மனிதனான உடலின் உள்பாகங்களையும் பற்றி அறிய உதவும் எக்ஸ்ரே, ஸ்கேனிங் போன்ற கருவிகள் அறிவியல் முன்னேற்றமே. தகவல்களை அனுப்பும் முறையிலும் அறிவியல் வெகு வளர்ச்சியைக் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

அறிவியல் நம் அன்றாட வாழ்வில் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது என்பதை நாம் அறிவோம். அறிவியல் முன்னேற்றத்தில் நன்மைகளும், தீமைகளும் உள்ளன. அதனால் நாம் அறிவியல் முன்னேற்றத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும்.